Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 229

வியாழக்கிழமை 13 ஜூலை 2023

ஆனி 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## மனிதப்புதைகுழி விசாரணைகளில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூலை 13
இலங்கையில் மனிதப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அங்கு மீட்கப்படும் உடல்கள் யாருடையவை? அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பொறிமுறைகளில் எமக்கு நம்பிக்கையில்லை. சர்வதேசப் பொறி »11



## வடக்கில் மூடப்பட்ட 200 பாடசாலைகள்

### இன்னும் பல பாடசாலை மூடுவிழாக் காணும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடக்கு மாகாணத்தில் 200 பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளன என்றும், »12

## உள்ளூராட்சிச்சபை காலநீடிப்பு திருத்தம் அரசமைப்புக்கு முரண்!

### பொதுஜன வாக்கெடுப்பு அவசியம் என சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீளக் கூட்டுவதற்கான உத்தேச தனியார் »11

## அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்கு ரணிலை தள்ளவேண்டும் இந்தியா

### கோரிக்கை விடுத்தார் இரா.சம்பந்தன்

**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் செயற்படுத்தப்படாமலுள்ள அனைத்து விடயங்களையும் செயற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், இந்தியத் தூதுவரிடம் கோரியுள்ளார். இந்த விடயத்தை இந்தியப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக தூதுவர் பதிலளித்துள்ளார்.** »11

## மோடிக்கான கடிதங்களில் ஒன்று இன்று தூதுவரிடம் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 13
13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி ஜன »11



குளிர்பானம் கொடுத்து

## 'ஐஸ்' வைத்த கடற்படை 'டோஸ்' வாங்கி ஓட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 13
கடற்படையால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் தங்கள் காணிகளை விடுவிக்கவேண்டும் »12

## 2 சிறுமிகள் துஷ்பிரயோகம் 38 வயது சந்தேகநபர் கைது

»11

## ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு மக்கள் போராட்டங்களே வழி

### முன்னாள் எம்.பி. சரவணபவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 13
தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் நிகழ்ச்சிநிரல் தற்போதும் தொடர்வதால் மக்கள் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று நாடாளு »11



## ஹெரோய்ன் கடத்தியவருக்கு வவு. மேல்நீதிமன்றால் தூக்கு!

வவுனியா, ஜூலை 13
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு ஹெரோய்ன் கொண்டு சென்ற குடும்பஸ்தர் »12

## மண்டைதீவு கிழக்கில் கடற்படைக்கான காணி பிடிப்பு மக்கள் எதிர்ப்பால் பிசுபிசுப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 13
மண்டைதீவில் உள்ள மக்கள் காணிகளை கடற்படையினருக்காகக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் பிரதேசமக்கள் அங்கு »12

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக பேரவையால் மூவர் தெரிவு

### தற்போதைய துணைவேந்தர் பேரா. சிறிசற்குணராஜா முன்னிலை

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களில் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை என்பது சோம்பேறி தேசம்



## அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

உலகிலேயே சோம்பேறிகள் அதிகம் வாழும் நாடு இலங்கை என்று விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தம்புள்ளயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இன்று அனைத்துத் தரப்பிலும் பின்தங்கியுள்ளது. இதற்கு எங்களின் மனோநிலையும் ஒரு காரணம். இலங்கையர்கள் புதையலின் மீது அமர்ந்து யாசகம் எடுக்கின்றனர். குறுகிய காலத்துக்கேனும் நாங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு அனுபவங்களைப் பெறவேண்டும் - என்றார். (ம-இ)

# அமைச்சுக்காக உயர்பதவிகள்

## அரசாங்கத்தின் பரிசீலனையை மறுதலித்த பெரமுனவினர்

கொழும்பு, ஜூலை 13

அமைச்சுப் பதவிகளைக் கோரும் பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கம் உயர்பதவிக் குழுவொன்றை உருவாக்க முன்வந்த நிலையில், அதை பெரமுனவினர் மறுத்துள்ளனர் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும், பெரமுனவின் முக்கியஸ்தர் சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அந்தக்கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. எனினும் ஜனாதிபதி ரணில், இந்தக் கோரிக்கையை தொடர்ந்து புறமொதுக்கி வருகின்றார். இதனால், பெரமுனவுக்குள் எழுந்துள்ள எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக 'உயர் பதவிகள் குழு' என்பதை உருவாக்கி வாகனங்கள் உள்ளிட்ட சலுகைகளை அவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் அண்மையில் முன்வந்தது. இந்த நிலையில், உயர் பதவிகள் குழு என்ற திட்டத்தை பெரமுன மறுத்துள்ளதுடன், தாம் பெயர் குறிப்பிட்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளே வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-இ)

# வாராந்தம் 1.5 மில்லியன் வருமானமீட்டும் ஜெரோம்

## விசாரணையில் திடுக்கிடும் தகவல்

கொழும்பு, ஜூலை 13

இலங்கை உட்பட 8 நாடுகளைச் சேர்ந்த சுமார் 300 வர்த்தகர்களுக்கு வாரத்துக்கு ஒருமுறை வர்த்தக ஆலோசனை சேவை மற்றும் ஆசீர்வாத நிகழ்ச்சியை போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நடத்தி வருகிறார் எனவும் அதற்கென அவர் 1.5 மில்லியன் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு நடத்திய விசாரணையில் இந்தவிடயம் தெரியவந்துள்ளது.

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் போதகர் ஜெரோமிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்தது.

அதன்பின்னர் அவர் நாட்டை விட்டு வெளியேறி இந்த விரிவுரைகளை மேற்கொண்டு வருவதுடன் இலங்கையிலுள்ள அவரது வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படுகிறது எனவும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.


இந்த விரிவுரையானது இணையவழியில் நடத்தப்படுவதுடன் வர்த்தகர்கள் இலங்கையிலுள்ள வங்கிக் கணக்கில் 210 அமெரிக்க டொலரை வைப்பிலிட்டு இந்த விரிவுரையில் இணைவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேவேளை, பிரபல தொழிலதிபர்கள், கோடீஸ்வரர்கள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களில் பணிபுரியும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் உயரதிகாரிகளே ஜெரோம் போதகரின் சீடர்கள் எனவும் தெரியவந்துள்ளது என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஊழியர் சேமலாப நிதியின்

# கொடுப்பனவுத் தகைமை விவரங்கள் இணையத்தில்

கொழும்பு, ஜூலை 13




ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்கள், ஓய்வூதியத்துக்கு முன்னரான 20 சதவீத நன்மைக்கொடுப்பனவு பெற்றுக்கொள்வதற்கான தகைமை குறித்து அறிந்துகொள்ளமுடியும் என தொழிற் திணைக்களம் அறிவித்துள்ளது.

www.labourdept.gov.lk என்ற தொழிற் திணைக்களத்தின் இணையத்தளத்தை அணுகுவதன் மூலம் அந்தத் தகவல்களைப் பெறமுடியும்.

30 சதவீத நன்மைக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியுடையவர்களா? என்பதை இதன்மூலம், ஊழியர்கள் அறிந்துகொள்ளலாம் என்றும் தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# ஜனாதிபதி ரணிலுக்கு மகத்தான வரவேற்பு!

## இந்தியா திட்டம்



கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது, அவருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் மோகன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலின் இந்தியப் பயணத்துக்கான தயார்ப்படுத்தலுக்காக இலங்கைக்கு வந்திருந்த அவர் இலங்கையில்வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது பயணத்தின் ஒருபகுதியாக ஜனாதிபதி ரணிலை குற்றவியல் வழக்குகளைத் தவிர்த்தல் சர்வதேச நியமங்கள் மற்றும் தராதரங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி, இரு நாட்டு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் சமூக, பொருளாதார இலக்குகளை அடைவது தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது. (ம-இ)

# பௌத்தத்துக்கு இழுக்கு: தேரர்கள் மீது நடவடிக்கை

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

பௌத்தத்துக்கு இழுக்கை ஏற்படுத்தும் தேரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதற்குரிய சட்ட ஏற்பாடுகள் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒழுக்கமற்ற முறையில் செயற்படும் பௌத்த மதகுருமார்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்டவரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இரு மாதங்களுக்குள் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இது தொடர்பில் புத்தசாசன, அமைச்சின் செயலாளர் சோமரத்ன திஸாநாயக்க அறிவித்துள்ளார். இறுதி சட்டவரைவு மகா சங்கத்தினரின் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மகா நாயக்க தேரர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு, அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (ம-இ)

# துருக்கிப் பெண் துஷ்பிரயோகம்

## சிப்பாய் கைது



கொழும்பு, ஜூலை 13

சுற்றுலாப் பயணியான துருக்கியை சேர்ந்த பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டில் இராணுவ கோப்ரல் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தம்புள்ள தலைமையக பொலிஸாரால் இந்தக் கைது நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. வவுனியாவிலுள்ள இராணுவ முகாமில் பணிபுரியும் மாத்தளையைச் சேர்ந்த சிப்பாயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான சிப்பாயிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# டெங்கு ஒழிப்புப் பணியாளர்களின் பணிகள் விரைவில் நிரந்தரமாகும்



## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

டெங்கு ஒழிப்புப் பணிகளுக்காகத் தற்காலிகமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிகள் நிரந்தரப்படுத்தப்படாவிட்டால், விரைவில் உதயமாகும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டெங்கு ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் சேவையை நிரந்தரப்படுத்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விருப்பம் தெரிவித்தபோதிலும், அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இதேபோன்ற பல அமைச்சரவைப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியில் புதிய வேலைவாய்ப்புகளை வழங்குவது கடினம் என்றாலும், இவர்கள் 7 வருடங்களுக்குமுன்னர் இலங்கையில் டெங்கு ஒழிப்புக்கு 22 ஆயிரம் ரூபா உதவித் தொகையுடன் பணிக்கு அமர்த்தப்பட்ட அரச ஊழியர்கள் என்பதால், அவர்களை 180 வேலை நாள்களுக்குள் நிரந்தரமாக்க வேண்டும் - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகள் விரைந்து காணப்படவேண்டும்

## ஜனாதிபதியின் நிலைப்பாடு இது



**கொழும்பு, ஜூலை 13**

**இலங்கையில் நல்லிணக்கத்தை உருவாக்கும் பணிகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்காமல், தற்காலத்திலேயே அதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்க மாகும் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.**

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்போது, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் நோக்கத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தியதோடு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் பற்றியும் வெகுவாக ஆராயப்பட்டது என்றும் சமன் ஏக்கநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-இ)

### பெண் சடலமாக மீட்பு

சாவகச்சேரி, ஜூலை 13

தனிமையில் வசித்துவந்த 60 வயதுடைய குடும்பப் பெண் வீட்டின் அறையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் பளை, இந்திராபுரத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. கந்தசாமி புஷ்பராணி என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கணவன் ஆறு மாதத்துக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் பிள்ளைகளும் வவுனியா செட்டிகுளத்தில் வசிப்பதாலும் இந்திராபுரத்தில் தனித்து வசித்து வந்தார்.

கடந்த 5 நாள்களாக தமது தாயாரை தொடர்புகொள்ள முயற்சித்தும் பலனளிக்காத நிலையில் நேற்றைய தினம் பிள்ளைகள் வந்து பார்த்தபோது அறையில் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். (ஒ-9)

### கணக்காளரை கடத்திய விவகாரம்; சந்தேகத்தில் மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

காணியை விற்பனை செய்வதாக ஏமாற்றியதாகக் கூறப்படும் கணக்காளரை கடத்திய குற்றச்சாட்டில் பிரதான சந்தேகநபரான பெண்ணும் இரண்டு ஆண்களுமான மூன்று பேர் மானிப்பாயில் வைத்து கோப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனமும் மீட்கப்பட்டுள்ளது.

காணி ஒன்றை விற்பதாகக் குறிப்பிட்டு, வாங்கிய பணத்தை கணக்காளர் மீள ஒப்படைக்காததையடுத்து அவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரியாலை, நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த 69 வயதான கணக்காளரே கடத்தப்பட்டிருந்தார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு காணியை விற்பதாகக் குறிப்பிட்டு, ரூ.13 இலட்சம் பெற்றதாகவும், காணியை விற்காததுடன், பணத்தை மீள வழங்காமல் இழுத்தடித்த நிலையில், காணி பார்க்க வருவதாக வேறொருவர் மூலம் நாடகமாடி, கணக்காளரை கல்வியங்காட்டுப் பகுதிக்கு வரவழைத்து அவரை வாகனத்தில் கடத்திச் சென்றனர். அவர் கொடுக்கவேண்டிய ரூ.13 இலட்சம் பணத்தையும் அவரது வங்கிக் கணக்கிலிருந்து மீளப்பெற்ற பின்னர், கல்வியங்காட்டில் இறக்கி விட்டுச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு பொலிஸார் தேடிய நிலையில் அவர்கள் தலைமறைவாகியிருந்தனர். இந்த நிலையில் நேற்றைய தினம் அவர்கள் மானிப்பாய் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-26)



# 'வங்குரோத்து' குறித்த தெரிவுக்குழு; விலகியது ஐக்கிய மக்கள் சக்தி!

## தனது தலைமையில் குழு அமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் சஜித் அழைப்பு

கொழும்பு, ஜூலை 13

நாடு வங்குரோத்து நிலை அடைந்தமை தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் விலகியுள்ளது.

நாடு வங்குரோத்து நிலை அடைந்தமை தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைமைப்பதவிக்கு பொது ஜன பெரமுனவின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளமைக்குஎதிர்ப்புத் தெரிவித்தே அந்தக் கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. இந்தக் குழுவில் இருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குழுவின் தலைமைப்பதவி ஆளுங்கட்சி வசம் இருப்பதால் இதன்நோக்கம் தெளிவாகிறது எனக்கூறி ஆரம்பம் முதலே அதனை எதிரணிகள் எதிர்த்தன. இந்நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி வெளியேறும் என்று எதிர்க்கட்சித் தலைவர் நேற்று அறிவித்தார். அத்துடன், இந்த விவகாரம் தொடர்பில் எதிரணிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் எனவும், தனது தலைமையில் குழுவொன்றை அமைத்து இது தொடர்பில் ஆராயலாம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார். (ம-44)




**எல்லா வீட்டு வேலிக்குள்ளாலையும் தலையை நுழைச்சு, தங்கட நாட்டாண்மையைக் காட்டுறது சிலருக்கு முழுநேரப் பொழுது போக்கு. யாழ்ப்பாணக் கம்பஸுக்கையும் அப்பிடி ஒரு வெளிநாட்டுச் சக்தி தங்களுக்கு விசுவாசமான ஆள்தான் புது துணைவேந்தரா வரவேணும் எண்டு, களத்தில இறங்கி கடுமையா கம்பு சுத்தியிருக்கு.**

**இப்ப துணைவேந்தரா இருக்கிறவர், ஆர் எவர் எண்டு பாக்காமல் மனசில பட்டதை பட்டெண்டு போட்டு உடைச்சிடுவார். அப்பிடி அவர் வெளிநாடு ஒண்டின்ர உள்வீட்டு ரகசியங்களைக் கூட வெளியில கொட்டியிருக்கிறார். இது அந்த நாட்டுக்கு கடுப்பைக் கிளப்பிட்டுது. பெரிய பொறுப்பில இருக்கிறவர் இப்பிடி தங்கட நாட்டு மானத்தை நடுறோட்டில வாங்கினால், கடுப்பு வரத்தானே செய்யும். 'இனி இவர் உந்த சீற்றில இருக்கக்கூடாது' எண்டு அவை குடைச்சல் குடுக்கத் தொடங்கிட்டினம். இந்தமுறை துணைவேந்தர் தெரிவிலையும், இவரை விழுத்த அந்த நாடு எக்கச்சக்கம் பிளான் எல்லாம் போட்டது. இப்ப இருக்கிற துணைவேந்தருக்கு எதிரா தங்கட பக்கத்துக்கு 'நம்பிக்கையான' ஒராளையும் களத்தில இறக்கி விட்டதும் இந்த நாடுதானாம். அப்பிடி களத்தில இறக்கிவிட்டதோட நிக்கமால், தாங்கள் 'நம்பி' இறக்கின அந்தப் பேராசிரியருக்கு பக்கபலமா சில தில்லாலங்கடி வேலையளையும் அந்தநாடு செய்திருக்கு.**

**துணைவேந்தர் தெரிவு நடக்க கொஞ்ச நாளைக்கு முதல், பேரவையில உள்ளவைக்கு தனிப்பட போன் பண்ணி, "எங்களை 'நம்பி' இருக்கிறவருக்கு சப்போர்ட் பண்ணுங்க. இப்ப இருக்கிறவரைத் தெரிவு செய்யாதிங்க" எண்டெல்லாம் பிரதட்டை போட்டிருக்கினம். அதோட இப்பத்தை துணைவேந்தரில என்னென்ன பழியெல்லாம் போடலாம் எண்டும் யோசிச்சு, சில கதையளை தாங்கள் 'நம்பி' இறக்கிவிட்ட தரப்பு மூலமா கம்பஸுக்கையும் பரப்பி இருக்கினம். அந்தக் கதையளில ஒண்டுதான், கம்பஸ் பிள்ளையளுக்கு சமைக்கிறதுக்கு 250 க்கு வாங்கின அரிசிக்கு 750 ரூபா எண்டு கள்ளக்கணக்கு காட்டிப்போட்டார் எண்டது. பொருளாதார நெருக்கடி வந்த பிறகு, கம்பஸ் பிள்ளையள் எல்லாருக்கும் அங்க 'சமுதாயச் சமையலறை' எண்ட திட்டத்தில சமைச்சு சாப்பாடு குடுபடுகுது. இலங்கையிலேயே யாழ்ப்பாணக் கம்பஸிலதான் அந்தத் திட்டம் வெற்றிகரமாச் செய்யப்படுகுது. அதுக்கு கம்பஸ் லெக்சர்மார், நலன்விரும்பியள் எல்லாரும் பங்களிப்புச் செய்யினம். அப்பிடி வெளியாக்கள் சிலர் அரிசியை நன்கொடையாக் குடுத்திருக்கினம். அந்த அரிசி இன்னும் சில மாசத்துக்கு காணுமாம். அதால இந்தத் திட்டத்துக்கு அரிசி கடையில வாங்கப்படவேயில்லை. அப்பிடியிருக்க வாங்காத அரிசியை வாங்கினதாச் சொன்னதோட அதை 750 ரூபாக்கு வாங்கினதா துணைவேந்தர் கணக்குக் காட்டினதாக சொல்லியிருக்கினம். பொய் சொல்றதிலையும் ஒரு அளவு இருக்கெல்லோ.**

**என்னதான் தாங்கள் குத்திமுறிஞ்சும், இப்ப பழைய ஆளுக்குத்தான் கூடுதலா புள்ளி கிடைச்சதால, இனி ரணில் மட்டத்தில அழுத்தம் குடுக்கப் போயினம் எண்டு கதை. பாப்பம், யானை அடங்குமா, இல்லையா எண்டு.**



- பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பெரும்பாலான மருத்துவமனைகளில் செயலிழந்துள்ளன 'சிடி ஸ்கானர்கள்'

கொழும்பு, ஜுலை 13

அரசாங்க மருத்துவமனைகளில் பெரும்பாலான 'சிடி ஸ்கானர்கள்' செயலிழந்துவிட்டன என்று மருத்துவமனையின் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் அரசாங்க கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்க மருத்துவமனைகளில் 44 'சிடி ஸ்கான்' இயந்திரங்கள் உள்ளன. கொழும்பு தேசிய மருத்துவமனையில் 12 'சிடி ஸ்கான்' இயந்திரங்கள் உள்ளன.

குருநாகல், கராப்பிட்டிய, திருகோணமலை, அம்பாந்தோட்டை, பதுளை, இரத்தினபுரி, களுத்துறை, ஹொரன உள்ளிட்ட பல மருத்துவமனைகளில் ஸ்கானர்கள் இயங்காமலுள்ளன. இந்த இயந்திரங்கள் இயங்க மறுத்துள்ளதால் சில நோய்களை அடையாளம் காண்பதில் மருத்துவர்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது - என்றனர். (ம)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுலை 13

மறைந்த பிரபல எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் 'ஓர் இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள்' அவரது பாரியார் திருமதி புனிதவதி சண்முகனின் 'ஆனந்தக் கூத்து நாட்டிய நாடகத் தொகுப்பு' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ரி3)

## ஓட்டோ அலங்கரிப்பு இனிமேல் கட்டணம்

கொழும்பு, ஜுலை 13

முச்சக்கரவண்டிகளில் அலங்காரங்களை மேற்கொள்ள இனி கட்டணம் அறவிடப்படும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முச்சக்கர வண்டிகளில் அலங்காரங்களை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படும் பல்வேறு அணிகலன்கள் மற்றும் அலங்காரங்களுக்குக் கட்டணம் அறவிடப்படும்.

அலங்காரங்களை நிறுவுதல் 30 வகைகளின் கீழ் மேற்கொள்ளப்படும். மேலதிக தகவல்களை முச்சக்கரவண்டி ஒதுக்கீட்டுக் கிளையிலோ அல்லது 0113484520 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பு மேற்கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## அமிர்தலிங்கம் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜுலை 13

எதிர்க்கட்சியின் முன்னாள் தலைவரும் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமுமான அமரர் அமிர்தலிங்கத்தின் 34ஆவது நினைவுதினம் பண்ணாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள அமரரின் திருவுருவச்சிலையடியில் இன்று வியாழக்கிழமை காலை 6.45 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ச)

## 'தராக்கி' நூல் வெளியீடு

மட்டக்களப்பு ஜுலை 13

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய 'தராக்கி' ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூல் வெளியீடு நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கட்டுரைத் தொகுப்பை இலங்கை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் சுவிஸிலுள்ள சிவராம் ஞாபகார்த்த மன்றம் ஆகியன இணைந்து தொகுத்துள்ளன.

தொகுப்பில் ஊடகத்துறை ஆளுமைகள், நண்பர்கள், உறவுகள் என 41 பேர் எழுதிய கட்டுரைகள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி2)

## காட்டு விலங்குகள் அட்டகாசம்; பழவகைகளின் உற்பத்தி நாசம்

### மடு மக்கள் கவலை

மன்னார், ஜுலை 13

மன்னாரில் காட்டுவிலங்குகள் குடிமனைகளுக்குள் புகுந்து பழவகை உற்பத்திகளை நாசம் செய்து வருவதால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது எனச் செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்;

மன்னார் மடுப் பிரதேச செயலகப் பிரிவில் பண்டிவிரிச்சான், இரணைஇலுப்பைக்குளம், இலம்பிட்டி, தட்சணாமருதமடு , காக்கையன்குளம், வளையன்கட்டுவரை மா, பலா, போன்ற பழமரங்கள் வளர்ப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது காட்டுவிலங்குகள் படையெடுத்து தோட்டங்களுக்குள் புகுந்து பழவகைகளை அழித்துச் செல்கின்றன.

இங்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாமரங்களிலிருந்து இரண்டு தொழிற்சாலைகளுக்கு மாம்பழங்கள் விநியோகிக்கப்படுகிறன.

காட்டுவிலங்குகள் மாம்பழங்களை அழித்து வருவதால் இரண்டு தொழிற்சாலைகளும் இயங்காது மூடப்பட்டுள்ளன. இயற்கைப் பசளைகள் கிடைக்கப்பெறுகின்றபோதும் பழமரங்களை வளர்க்கும் வாய்ப்புகள் உள்ளபோதும் காட்டுவிலங்குகளின் அட்டகாசத்தால் அதில் அக்கறை செலுத்தாது பழமரச் செய்கையை கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அதனால் அன்றாட வாழ்வாதாரம் இழக்கப்பட்டு பாதிப்புக்குள்ளாகியுள்ளோம்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து காட்டு விலங்குகளின் அட்டகாசத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-60)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாக எதிர்பார்த்த காரியம் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம் :** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். நன்மை உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார்.

**விருச்சிகம் :** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**கும்பம்:** குடும்பத்துடன் இறைவழிபாட்டில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களுக்காகச் செலவு செய்ய நேரிடும். நண்பர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைவுகளுக்கு உருமறைப்பா?

உலகிலேயே மிகப் பலமான ஆயுதம், நினைவு. நினைவுகள் தான் எமது இலட்சியத்தை வரையறை செய்கின்றன, நினைவுகள் தான்வழிகாட்டுகின்றன, நினைவுகள்தான் சந்ததி சந்ததியாகத் தொடரும் தீரா ஏக்கங்களை உயிர்ப்போடு வைத்திருக்கின்றன, நினைவுகள்தான் தருணம் பார்த்து பழி தீர்த்தும் கொள்கின்றன. ஒட்டுமொத்தத்தில் நினைவுகள் இல்லாவிட்டால் மனிதன் வெறும் இயந்திரமே. மனிதனை மனிதனாக வைத்திருக்கவும், எத்தனை வருடங்களானாலும் இலக்கினை அடைந்து கொள்ளும் ஓர்மத்தீயை அழியவிடாமல் எரியவைப்பதிலும் நினைவுகளே பெரும் பங்காற்றுகின்றன. வெடிக்காமல் பூமிக்கடியில் புதைந் திருக்கும் அணுகுண்டைவிடவும் நினைவுகள் ஆபத்தானவை. அதனால்தான் நினைவுகளை அழித்தல் என்பதற்கு அதிகாரசக்தி கள் எப்போதும் முன்னுரிமை கொடுக்கின்றன. போர் இடம்பெற்ற போது, படையினரால் கைப்பற்றப்பட்ட இடங்களில் இருந்த புலிகளின் சகல நினைவுத்தூபிகளும், மாவீரர் துயிலுமில்லங்களும் இருந்த இடமே தெரியாமல் சிதைக்கப்பட்டன. இதன்மூலம், புலிகளின் வீரம், தியாகம், உயிர்க்கொடை என்பவற்றை எமது அடுத்த தலைமுறை கண்ணால் கண்டுணர்ந்து, காதால் கேட்ட றிந்து அந்த நினைவுகளைத் தொடர்ச்சியாகப் பேணு வதைத் துண்டிப்பதே சிறிலங்கா அரசினதும், அதன் படைகளினதும் நோக்கமாக இருந்தது.

கண்ணுக்குப் புலப்படத்தக்க, ரூப வடிவிலான போர்க்கால நினைவுகள் எல்லாவற்றையும் வழித்துத் துடைத்து அழித்த பின்னரும் பேரினவாத அரசாலும், படைகளாலும் தாம் நினைத்தவாறு தமிழ் மக்களின் மனதில் இருந்த உரிமைக் கனவுகளையும், புலிகளின் ஈகத்தையும், இறுதிப்போர் அவலத்தையும் முற்றாக இல்லாமற் செய்துவிட முடியவில்லை. வருடந்தோறும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாள் நினைவேந்தல், தியாக தீபம் திலீபன் நினைவேந்தல், மாவீரர் நாள், புலிகளின் தலைவரின் பிறந்ததினம் என்று எல்லாவற்றையும் – கலந்துகொள்வோரின் எண்ணிக்கை வரையறைக்குட்பட்டதாக இருந்தாலும் கூட – தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றவே செய்கின்றனர். இப்படி எல்லா நினைவுகளுக்குமான மூலாதாரங்களை அழித்த பின்னும் எப்படி தமிழ் மக்கள் இன்னும் புலிகளின் நினைவுகளையும், போர்க்கால வடுக்களையும் அப்படியே ஈரம் காயாமல் வைத்திருக்கிறார்கள் என்ற வினா சிங்களத்தின் மூளைக்குள் குடையத் தொடங்கிற்று. 'துலாம் பரமாகத் தெரிந்த ரூப வடிவிலான நினைவுகளைப் பிடுங்கினாலும், ஸ்தூல வடிவிலான நினைவுகள் தமிழர்களிடையே தொடர்ச்சியாகக் கையளிக்கப்பட்டே வருகின்றன' என்பதை அதிகாரத்தவர்கள் கண்டுகொண்டனர். அதனால் தம் பார்வையை அரூபவடிவில் நிலைத்திருக்கும் போரின் சாட்சிகளை நோக்கித் திருப்பி, அவற்றை உருமறைப்புச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் ஒன்றுதான், நந்திக்கடல் பகுதியைச் சுற்றுலா மையமாக மாற்றுவது.


நந்திக்கடல் தான் இறுதிப்போரில் வழிந்தோடிய இரத்த ஆற்றை தன்னுள் பொதிந்து வைத்திருக்கிறது. அதற்குள் ஆயிரக் கணக்கானோரின் கண்ணீர் இன்னும் கரித்துக் கொண்டிருக்கிறது. எவருக்குமே தெரியாத பல படுகொலைகள் பற்றிய கதைகளை சொல்லமுடியாமல் நந்திக்கடல் குமுறிக்கொண்டிருக்கிறது. உன்னதமான உரிமைப்போராட்டம் எப்படி உன்மத்தமாகக் கூட்டுச் சதியால் வீழ்த்தப்பட்டது என்பது நந்திக்கடலுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். இன்னும் விடைதெரியாத 'அவர் இருக்கிறாரா? இல்லையா?' என்ற மர்மத்துக்கான விடையும் நந்திக்கடலுக்கே நன்கு தெரியும். அதனால்தான் இன்று நந்திக்கடல் என்றதும் எல்லோருக்கும், ஒரு மனிதக்கூட்டம் கொன்றொழிக்கப்பட்ட நீர்ச்சாட்சியப் படிமமாக அது கண்முன்னே விரியும். அந்தக் கடலை சுற்றுலா மையம் என்ற பெயரில் உருமறைப்புச் செய்து, நினைவுகளை மடைமாற்ற பேரினவாத அரசாங்கம் 'அபிவிருத்தி' என்ற பெயரில் திட்டங்களை வகுத்துள்ளது. இதனை நாம் சாதகமாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

ஒரு மக்கள் குழுமத்தின் அல்லது தேசத்தின் துயரடர்ந்த நிகழ்ச்சிகளான இறப்பு, கொலை, அழிவு முதலியன நடைபெற்ற இடங்களை அவற்றின் சான்றாதாரங்களை உள்ளடக்கிய சுற்றுலா முறையொன்று உலகெங்கும் இருக்கவே செய்கின்றது. இந்தச் சுற்றுலா முறைமையானது கறுப்புச் சுற்றுலா, துயரச் சுற்றுலா, இருள் சுற்றுலா என்றழைக்கப்படும். கறுப்புச் சுற்றுலாவானது, அதன் பார்வையாளர்களிடம் சமூக நீதிக்கான நாட்டத்தையும், பொறுப்புக் கூறல் உணர்வுத்தோழமையையும் எதிர்பார்ப்பதுடன் எதிர்காலத்தில் இவை மீளவும் நடைபெறக்கூடாது என்ற மனநிலையை வருங்காலச் சந்ததியிடம் ஏற்படுத்தலையும் நோக்கமாகக் கொண்டது. ஒருவகையில் ஒரு கூட்டுத் துக்கம், கூட்டு மனக் காயத்தை ஆற்றுதல் முதலான விடயங்களுக்கான களங்களாகவும் இவை காணப்படுகின்றன. கல்லறைகள், வரலாற்று அரும்பொருளகங்கள், படுகொலைக் களங்கள், அழிவிடங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய ஒன்றாக இச்சுற்றுலா அமையும். இந்தவகையிலேயே நந்திக்கடலையும் இப்படியான கறுப்புச் சுற்றுலா மையமாக, இனப்படுகொலையின் சாட்சியமாக அடையாளப்படுத்துமாறு அரசுக்கு நாம் அழுத்தம் கொடுக்கவேண்டும். அதன் மூலம் எந்த நினைவை அழிக்க அரசாங்கம் நந்திக்கடலை சுற்றுலா மையமாக மாற்ற முயற்சிக்கிறதோ, அதே சுற்றுலாத் திட்டத்தையே நாமும் ஆயுதமாக்கி அதே நினைவுகளைத் தொடர்ச்சியாகப் பேணும் வகையில் மாற்றமுடியும்.

நாளொரு நல்வார்த்தை

"கற்றறிந்தவர்களாக இருப்பது மட்டுமல்ல, நல்லொழுக்கத்துடன் இருப்பதும் மிகவும் முக்கியமானது"

— ஜோர்ஜ் வோஷிங்டன்




# குற்றவியல் வழக்குகளைத் தவிர்த்தல் அப்பட்டமான மனித உரிமை மீறலே!

### இலங்கை அரசாங்கத்திடம் ஜஸ்மின் சூக்கா வலியுறுத்து



**கொழும்பு, ஜூலை 13**

**குற்றவியல் வழக்குகளைத் தவிர்த்தல் சர்வதேச நியமங்கள் மற்றும் தராதரங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்று இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார் ஜஸ்மின் சூக்கா.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் மூலம் குற்றவியல் வழக்குகள் இடம்பெறவேண்டும் என்பது குறித்து இலங்கை அரசாங்கம் உறுதியாயிருக்க வேண்டும். குற்றவியல் வழக்குகளைத் தவிர்த்தல் சர்வதேச நியமங்கள் மற்றும் தராதரங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும். ஆவணங்களை அழிப்பதை தவிர்த்தல் தொடர்பில் பாதுகாப்புப் படையினர் உரிய அமைப்புகள் திணைக்களங்களுக்கு உத்தரவொன்றை பிறப்பிக்கவேண்டும், ஆவணங்களை அழிப்பதை குற்றமாக அறிவிக்கவேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணைகளில் முன்வைக்கப்படும் ஆதாரங்களை எதிர்கால வழக்குகளை நோக்கமாகக் கொண்டு பிந்திய கட்டத்தில் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (ம-இ)

## சிக்கலான மருந்துகள் பாவனையில் நீக்கம்!



### பிறிதொரு மருந்து இறக்குமதி

மருத்துவமனைகளில் அண்மைக்காலமாக பதிவாகிய சாவுகளுக்கு அவர்களுக்குப் பயன்படுத்திய மயக்கமருந்துகளே காரணமென பல்வேறு சர்ச்சைகள் உருவாகியுள்ள நிலையில், அந்த மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அவற்றுக்குப் பதிலாக பிறிதொரு மயக்க மருந்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குறித்த மயக்க மருந்தைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சிலர் உயிரிழந்தமையை அடுத்து சுகாதாரத் தரப்பினர் இதுதொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர் என சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

### இலங்கைக்கான

## ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங்கிணைப்பாளராக மார்க்



கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளராக மார்க் அன்ட்றே பிராஞ் என்ற கனேடியர் நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரஸால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 8ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்கும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர், லிபியாவில் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான ஐ.நா.வின் பிரதிநிதியாக முதலில் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

நாளை

14.07.2023
வெள்ளிக்கிழமை
ஆனி 29

சுபநேரம் : 06.00 - 07.30
ராகுகாலம் : 10.30 - 12.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவை உள்ளீர்க்க திரைமறைவுப் பேச்சு

கொழும்பு, ஜூலை 13

**வீழ்ந்து கிடக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் கட்சியில் இணையவேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் கருதுவதால் அதற்கான நகர்வில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று அறியமுடிகின்றது.**

முதலில் சந்திரிகாவுக்கும் சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிக்கும் இடையில் இருக்கின்ற மனக்கசப்பை நீக்கவேண்டும். அது நடந்தால்தான் சந்திரிகாவை மீண்டும் கட்சியில் இணைப்பது சாத்தியம்.

அதனால் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மைத்திரியை 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு எதிராக இறக்கி அவரை ஜனாதிபதியாக்கியதில் பெரும் பங்கு சந்திரிகாவுக்கு உண்டு.

ஆனால், மக்கள் ஆணைக்கு மாறாக 2018 இல் மஹிந்தவை, மைத்திரி பிரதமராக்கியதில் இருந்து சந்திரிகாவுக்கு மைத்திரியுடன் மனக்கசப்பு ஏற்பட்டது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவுக்கு ஆதரவு வழங்குவதற்குச் சுதந்திரக் கட்சி முடிவெடுத்ததால் அந்த மனக்கசப்பு மேலும் வலுவடைந்தது. மைத்திரியை வெளிப்படையாகவே விமர்சிக்கத் தொடங்கினார் சந்திரிகா.

இருந்தும், சுதந்திரக் கட்சி வீழ்ந்து விட்டது. அதைக் கட்டியெழுப்புவதென்றால் சந்திரிகா கட்சியில் இருக்கவேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது கருதுவதால் அவரை இணைப்பதற்கான நடவடிக்கையில் அவர்கள் இறங்கியுள்ளனர். (ஒ-22)

## வீதி விபத்தில் சிறுவன் பலி!

புத்தளம், ஜூலை 13

கற்பிட்டிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். தந்தையுடன் வீட்டுக்கருகிலுள்ள கடை ஒன்றுக்குச் சென்றபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இருவரும் வீதியில் சென்றுகொண்டிருந்தவேளை பின்னால் வேகமாக வந்த கார் அவர்கள் மீது மோதியதாலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. தந்தை சிறு காயங்களுடன் தப்பிய வேளை சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-ரி3-22)

## திருகோணமலை மீனவர்கள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 13

நீர்கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு தென் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இலங்கை மீனவர்கள். மீது இந்தோனேஷியாவின் 'பலநாள் கலம்' நடத்திய பெற்றோல் குண்டுத் தாக்குதலில் கடற்றொழிலாளர் ஒருவர் தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த 33 வயதுடையவரே தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

காயமடைந்தவர் நாட்டின் கடற்பரப்பில் பயணித்த கப்பலொன்றில் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் டோரா படகின் மூலம் காலி துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டு கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

## அம்மைநோய்த் தாக்கம்; சிறுவரிடையே தீவிரம்



*கொழும்பு, ஜூலை 13*

*தற்போது நிலவும் காலநிலை காரணமாக சிறுவர்களிடையே அம்மைநோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 12 சிறுவர்கள் இந்தநோயால் பாதிக்கப்பட்டு கொழும்பு லேடிரிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*அம்மைநோயின் அறிகுறிகளாக காய்ச்சல் மற்றும் சிவப்பு கொப்பளங்கள் ஏற்படுதல் ஆகியன காணப்படுகின்றன.*

*எனவே இந்தநோயின் ஆபத்துக்கள் குறித்து பெற்றோர் கவனம் செலுத்தி குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டும் என்று விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (ச-இ)*

## சடலம் மீட்பு

உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கோமகம பிரதேசத்தில் நேற்றுக்காலை மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீதியோரத்தில் அடையாளம் காண முடியாதவாறு உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-22)

## மின்சாரம் தாக்கி பல்கலை மாணவி சாவு!

கொழும்பு, ஜூலை 13

வீட்டில் மின்சாரம் தாக்கி பல்கலைக்கழக மாணவி ஒருவர் சாவடைந்துள்ளார். கம்பஹா - அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 24 வயதுடைய மாணவியே உயிரிழந்துள்ளார்.

மாணவி மின்னழுத்தியைக் கையாண்டபோதே மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஒ-22)

## வருடந்தோறும் சுமார் 900 குழந்தைகள் புற்றுநோயால் பாதிப்பு

### மருத்துவர் தீபால் எச்சரிக்கை

*ஒவ்வோர் ஆண்டும் சுமார் 900 குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். அச்சத்தை உண்டுபண்ணும் இந்த புள்ளி விவரங்களுக்கு தற்போதைய பழக்கவழக்கங்களே வழிவகுக்கின்றன. அவற்றை தவிர்த்து எதிர்கால சந்ததியினரை நாம் ஆரோக்கியமாக உருவாக்கவேண்டும் - இவ்வாறு குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் மருத்துவர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.*

*அவர் மேலும் கூறுகையில்;*

*ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது 900 குழந்தைகள் புற்றுநோயாலும் சுமார் 100 குழந்தைகள் நீரிழிவு நோயாலும் பாதிக்கப்படுகின்றன.*

*ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், உடனடி உணவுகள், உலர் உணவுப் பயன்பாடு, கைபேசியில் மூழ்கல், விளையாட்டு மற்றும் உடற்செயற்பாடுகளில் ஈடுபடாமை என பல காரணிகள் இந்த புள்ளிவிவரங்களுக்கு வழிசமைக்கின்றன.*

*துரித உணவுகளைத் தவிர்த்து உடற்செயற்பாடுகளை அதிகரிப்பதன் வாயிலான ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை உருவாக்க வேண்டும். அதற்கான பொறுப்பு மருத்துவர்களான எங்களுக்கு உள்ளதைப் போல பெற்றோர் கையிலும் உள்ளது என்பதை அனைவரும் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும் - என்றார். (ச-இ)*



## சிறுவனிடம் குழந்தையை ஒப்படைத்து தப்பிய நபர்

### பொலிஸார் விசாரணை

கொழும்பு, ஜூலை 13

போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரிவிக்கப்படும் நபரொருவர் 4 மாதக் குழந்தையொன்றை பிறிதொரு வீட்டிலுள்ள 10 வயதுச் சிறுவனிடம் ஒப்படைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஹொரணை பிரதேசத்தில் நடந்துள்ளது.

தனது மகனிடம் குழந்தையொன்றை நபரொருவர் தனிமையில் விட்டுச் சென்றுள்ளார் என 10 வயதுச் சிறுவனின் தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய உடனடியாக சிறுவர் மற்றும் பெண்கள் நல பணியக அதிகாரிகள் குழு குறித்த வீட்டுக்குச் சென்று குழந்தையை மீட்டு ஹொரணை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். (ச-இ)

## யானைத் தாக்குதலில் 3 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 13

நாட்டின் வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காட்டு யானைகள் தாக்கி யுவதி உட்பட மூவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பொலநறுவை, இலங்காபுரம் பிரதேசத்தில் 27 வயதுடைய யுவதி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை தாயாருடன் வயல் வெளிக்குச் சென்றபோது காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தாய் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மொனராகலை, புத்தள பிரதேசத்தில் 54 வயதுடைய ஆண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது வீதியைக் கடந்து சென்ற யானைகளில் ஒன்று தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை அநுராதபுரம், கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் 33 வயதுடைய ஆண் ஒருவர் மாடு மேய்ப்பதற்காக அந்தப் பகுதியிலுள்ள குளத்துக்குச் சென்ற போது யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ரி3-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனை வரவழைக்க நடவடிக்கை எடுங்கள்

## சாந்தனின் தாயார் ஜனாதிபதிக்கு கடிதம்


இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட சாந்தனை சொந்த நாட்டுக்கு வருவதற்கு அனுமதியளியுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி கடிதம் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பணிமனை ஊடாக ஜனாதிபதிக்கும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஊடாக வெளிவிவகார அமைச்சருக்கும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

32 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த வந்த சாந்தன் உள்ளிட்டவர்களைக் கடந்த ஆண்டு இந்திய நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆயினும் இன்றுவரை அவர்கள் சொந்த நாட்டுக்கு விடுவிக்கப்பாது திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆகவே எனது பிள்ளையை சொந்த நாட்டுக்கு விடுவிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாந்தனின் தாயார் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)


## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

தோற்றம் 14 . 06 . 1942



மறைவு 24 . 06 . 2022

கடந்த (24.06.2022) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் திரு.சின்னத்தம்பி முருகையா**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (13.07.2023) அவரது இல்லமாகிய 134/2, திருவையாறு என்னும் முகவரியில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

(CR 37247) A-1

தொ.பே: 076 354 2643

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 01 . 1950



இறப்பு 11 . 07 . 2023

### திரு.கதிர்காமு தவராசா

(ஓய்வுநிலை உதவி பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை)

பரியந்தர்வளவு, வதிரியைப் பிறப்பிடமாகவும் யாதவம், வதிரி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கதிர்காமு தவராசா நேற்று முன்தினம் (11.07.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமு சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் மருமகனும், யம்சனாதேவியின் அன்புக் கணவரும், மயூரன், யாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மதாஸ், பத்மஜா ஆகியோரின் மாமனாரும், அமரர் சோதிநாயகி, செல்வராசா, கனகராஜா, கிருஸ்ணராஜா, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கவிசானி, திருசானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குடும்பத்தினர்

(cr.37246) (N.1)

021 226 4116, 077 442 1669

Invitation

Batticotta Seminary – Jaffna College

Celebrating 200 Years of Education and Service to the Community

## 200th Anniversary Service of Thanksgiving

Sunday, 16 July 2023

at

9.00 a.m.

at

the JDCSI Cathedral, Vaddukoddai

**Jaffna College Alumni Association**

(Cs 51226) (N .1)

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்பெறுகைகளுக்கான அழைப்பு துவிச்சக்கரவண்டி கொள்வனவு

01. தலைவர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் கீழ்வரும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பொருட்களை வழங்குவதற்குத் தகைமையுள்ள கோள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | பெறுகை இல. | சேவையின் விபரம் | அளவு | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|---|
| 01 | NP/30/02/04/PSDG/Bicycle/2023 | துவிச்சக்கரவண்டி வழங்கல் | பெண்கள் துவிச்சக்கரவண்டி - 300<br>யாழ்ப்பாண மாவட்டம் - 30<br>கிறிநொச்சி மாவட்டம - 107<br>முல்லை மாவட்டம் - 107<br>வவுனியா மாவட்டம் - 28<br>மன்னார் மாவட்டம் - 28<br>ஆண்கள் துவிச்சக்கரவண்டி - 50<br>யாழ்ப்பாண மாவட்டம் - 05<br>கிறிநொச்சி மாவட்டம - 18<br>முல்லை மாவட்டம் - 17<br>வவுனியா மாவட்டம் - 05<br>மன்னார் மாவட்டம் - 05 | 150,000.00 |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.

03. வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றிருத்தலாகாது என்பதுடன் இலங்கைப் பிரஜையாக அல்லது தனிப்பட்டவராகவோ இருப்பதோடு கேள்விதாரர் மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்குரியதான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்விதாரர் குறிப்பிட்ட துறையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை ஆணையாளர், வட மாகாண பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 13.07.2023 ஆம் திகதி தொடக்கம் 03.08.2023 ஆம் திகதி வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.5000.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் தொலைபேசி இல:- 021 222 4782 தொலைநகல்:- 021 205 7103

07. மேலதிக தகவல்கள் பகுதி 2 கேள்வித் தரவில் வழங்கப்பட்டுள்ளது.

08. கேள்வி ஆவணங்கள் 04.08.2023 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

09. பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் பெறுகை இலக்கம் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் 04.08.2023 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

10. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

11. பெறுகை முன்ஆயத்தக் கூட்டம் 28.07.2023 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு மீனாட்சிஅமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது திணைக்களத்தில் நடைபெறும்.

12. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தலைவர்,
திணைக்கள பெறுகைகள் குழு (பெரியது),
வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.

(cr 37242) (N-1)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி



கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தால் அமரர் சிவசிதம்பரத்தின் 100 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு மாட்டுவண்டி சவாரிப் போட்டி கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சோனப்பு மாட்டுவண்டி சவாரித் திடலில் நடத்தப்பட்டது.
குறித்த போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட முதல் மாட்டு வண்டிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ய-27)



யாழ். நல்லூர் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் கடந்த 6ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. (ய-27)



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் மஞ்சத் திருவிழா அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (ய-66)

# துவிச்சக்கரவண்டி கையளிப்பு



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்ற வாராந்த நிகழ்வின் போது புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த மாணவியொருவருக்கு துவிச்சக்கரவண்டி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. (ய-66)

# விழிப்புணர்வும் சிரமதானமும்



டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டமும் சிரமதான நிகழ்வும் மாதகல் தெற்கு கிராமஅலுவலர் பிரிவில் அமைந்துள்ள மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தில் கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (ய-66)

# மாணிக்க விழா

கிளிநொச்சி சிவபாத கலையகம் பாடசாலையின் மாணிக்க விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலை அதிபர் பரமேஸ்வரி சோதிலிங்கம் தலைமையில் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
இந்நிகழ்வில் 'மாணிக்கத் தடம்' எனும் நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
முதல் பிரதியை வடக்கு மாகாண பிரதம செயலாளர் வெளியிட்டு வைக்க, கலாநிதி சர்வேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.
தொடர்ந்து கலைநிகழ்வும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (ய-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி வங்குரோத்து தொடர்பில் 3 மாதங்களுக்குள் அறிக்கை!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய்வதற்காக பொதுஜன பெரமுன வின் பொதுச்செயலாளர் சாகர காரிய வசம் தலைமையில் நியமிக்கப்பட்ட தெரி வுக்குழு கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது. நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் எதிர் வரும் மூன்று மாதகாலத்துக்குள் நாட்டு மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அறிக்கை சமர்ப்பிப்போம்.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதி நிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

தலவதுகொட பிரதேசத்தில் நேற்று ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு கண்டு விட்டே ாம் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். கடன் பெறாமல் தேசியப் பொருளாதா ரத்தை மேம்படுத்தும் எந்தப் புதிய திட்டங் களையும் அரசாங்கம் செயற்படுத்த வில்லை. மாறாக கடன் பெற்று தற்காலிக தீர்வு எட்டப்பட்டுள்ளது.

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய்வதற்கு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள நாடா ளுமன்றத் தெரிவுக்குழு கேலிக்கூத்தாக் கப்பட்டுள்ளது. குழு ஒருமுறையேனும் கூடவில்லை. குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட எதிர்க்கட்சியின் உறுப்பி னர்கள் பதவி விலகியுள்ளார்கள்.

நிதி முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டு கடன் ஸ்திரப்படுத்தல் தொடர்பில் துறை சார் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை களை மேற்கொண்டு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுப்பதற்கு கடந்த ஆண்டு ஜூலை மாதம் நான்காம் திகதி கோப் குழு தீர்மானித்தது. நான் அப்போதைய கோப் குழுவின் தலைவராகப் பதவி வகித்தேன். மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து கோத் தாபய ராஜபக்ச பதவி விலகினார். ரணில் விக்கிரமசிங்க இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஜனாதிபதி நாடா ளுமன்றத்தை ஒத்திவைத்ததை அடுத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் அனைத்தும் செயலிழந்தன.

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய்வதற்கு அவதானம் செலுத்தியவர் கள் தற்போதைய கோப் குழுவுக்குள் உள் வாங்கப்படவில்லை. 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டின் நிதி நிலைமை மற்றும் தவறான தீர்மானங்கள் தொடர்பில் கணக்காளர் நாயகம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தற்போது செயற்பட வேண்டும். நிதி வங்குரோத்த நிலை தொடர்பில் ஆராயத் தீர்மானித்துள்ளோம். நாடாளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசி யல் கட்சிகளையும் ஒன்றிணைத்து அதற் கான பணிகளை நாளை முதல் முன்னெ டுப்போம் - என்றார். (எ-இ)


### வீடு வாடகைக்குத் தேவை

நிறுவனமொன்றிற்கு யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் விசாலமான வீடு வாடகைக்குத் தேவை.

**0777 4444 07**


# மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 01 . 1937

இறப்பு 12 . 07 . 2023

## இரத்தினவடிவேல் மங்கையற்கரசி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கல்லை வேம்படி சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினவடிவேல் மங்கையற்கரசி நேற்று (12.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு நாச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினவடிவேல் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும், மாரிமுத்துவின் பெறாமகளும், உதயகுமார், ஆனந்தகுமார், விஜயகுமார், சிவகுமாரி, செல்வகுமாரி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணாகரன், நாகலிங்கம், நாகேஸ்வரி, சிவனேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான குமார சாமி, சிவகாமசுந்தரி மற்றும் ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜீவானந்தவேல், ஆதவன், யோகரத்தினம், சிவாநிஜி, கஜகரன், சதீஸ்வரன், கதிரினா, பிரியங்கா, கஜவேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2023) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

078 7810 860
077 9907 889
077 9078 198
0049 1764 1367 032
0041 7628 666 82

தகவல்
குடும்பத்தினர்.

(CS 25517) A-1

# மரண அறிவித்தல்

## திருமதி சிவரஞ்சன் அருள்ராணி



(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி,
யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்)

தோற்றம் 08.05.1961

மறைவு 12.07.2023

சிவன்கோயில் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி சிவரஞ்சன் அருள்ராணி நேற்று (12.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - மகேஸ்வரி தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவரஞ்சனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, உதயராணி மற்றும் இந்திராணி, அற்புதராணி, அற்புதராஜா ஆகியோரின் சகோதரியும், ஜெயக்குமார், யோகலிங்கம், கிருபராஜ், நந்தினி ஆகி யோரின் மைத்துனியும், அபிராமி, அரவிந்தன், அபர்ணா, அபிஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிமல்ராஜின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2023) வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
அற்புதராஜா - 076 195 9248
நந்தினி - 077 688 9920
அரவிந்தன் - 077 306 5185

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25516)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இடியன் துப்பாக்கி' கலாசாரம்; காவுகொள்ளப்படும் உயிர்கள்!

## அச்சத்தில் முல்லைத்தீவு மக்கள்; கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூலை 13**
**முல்லைத்தீவில் சட்டவிரோத இடியன் துப்பாக்கிப் பாவனை அதிகரித்துள்ளது. காட்டு மிருகங்களை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்ட இடியன் துப்பாக்கி தற்போது மனிதர்களை வேட்டையாடுகின்றது என முல்லைத்தீவு மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.**

அவர்கள் மேலும் கூறுகையில்;
முல்லைத்தீவு, மல்லாவி - ஐயன்கன் குளம் பொலிஸ் பிரிவுகளில் கடந்த சில நாள்களாக சட்டவிரோத துப்பாக்கியான இடியன் துப்பாக்கியின் பாவனை அதிகரித்துள்ளது.
காட்டுமிருகங்களை வேட்டையாடுவதற்கு பயன்படுத்தப்பட்ட இடியன் துப்பாக்கியை தற்போது மனிதர்களை வேட்டையாடப் பயன்படுத்தி வருகிறார்கள், அதனால் பல உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன.
அண்மையில்இடியன்துப்பாக்கியால் இளைஞன் ஒருவன் சுட்டுப்படு கொலை செய்யப்பட்டுள்ளான்.
மல்லாவி - பாலிநகரில் கடந்த வாரம் இரு குழுக்களிடையே இடம்பெற்ற முரண்பாட்டில் இடியன் துப்பாக்கியால் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சட்டவிரோத துப்பாக்கிப் பாவனை தொடருமானால் மேலும் பல மனித உயிர்கள் காவுகொள்ளப்படும்.
எனவே இடியன் துப்பாக்கிப் படுகொலைகள்தொடர்பில்விசாரணைகளை முடுக்கிவிடும் பொலிஸார், அந்தத் துப்பாக்கியின் பாவனையைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-19)

## கொக்குத்தொடுவாய்

# புதைகுழி தொடர்பில் எதுவுமே தெரியாது!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில் எதுவும் தெரியாது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலகவிடம் கொழும்பு ஊடகமொன்று இந்தப் புதைகுழிகள் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதேவேளை மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துக்களைப் பெறுவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீதியமைச்சர் ஆகியோரைத் தொடர்புகொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டம் இன்று

கொடிகாமம், ஜூலை 13
கைதடிதெற்கு, தென்கிழக்கு கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு கைதடி தெற்கு சைவ ஐக்கியவாசிகசாலையில் இடம்பெறவுள்ளது.
அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கமக்கார அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-ரி2-159)

# கைபேசிகள் 'அபேஸ்' பூசகர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13
பூசகர்கள் ஐவரின் கைபேசிகளை திருடிய குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பூசகர் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்திலுள்ள அம்மன் கோயிலொன்றில் மண்டபத்தில் உறங்கிக் கொண்டிருந்தவேளை கைபேசிகள் களவாடப்பட்டுள்ளன என பூசகர்கள் ஐவரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
முறைப்பாட்டில் திருடப்பட்ட கைபேசிகளின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.
முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட விசாரணையில் 25 வயதுடைய பூசகர் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-ரி2)



# தீக்கிரையான 'குர்ஆன்': ஜனாதிபதி கண்டனம்!

கொழும்பு, ஜூலை 13
சுவீடனில் குர்ஆன் எரிக்கப்பட்டமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பூகோள விழுமியங்களை மதிக்குமாறும், கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அமைதியின்மைக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம)

# யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணக் கல்லூரியினதும் அதனது தாய்க் கல்வி நிறுவனமாகிய பற்றிக்கோட்டா செமினரியினதும் கல்விப் பணியையும் சமூகப் பணியையும் நினைவுகொள்ளும் வகையில் 200 ஆவது ஆண்டுக் கொண்டாட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி ஒரு வாரத்துக்கு கோலாகலமாக இடம்பெறவுள்ளன.
ஆரம்ப நிகழ்வாகப் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வாகன நடைபவனி நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 7 மணிக்குக் கல்லூரி வாசலில் ஆரம்பமாகி, கோட்டைக்காடு ஊடாக அராலி, செட்டியார்மடம், துணவி, நவாலி மானிப்பாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, வட்டுகோட்டை வழியாக யாழ்ப்பாணக் கல்லூரியை வந்தடையவுள்ளது.
மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பேராலயத்தில் நன்றி கூரல் ஆராதனை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
அன்றையதினம் கசூரினாக் கடற்கரையில் பழைய மாணவர்கள் ஒன்றுகூடலுடன் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும்.
மறுநாள் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இடம்பெறும்.
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு பழைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்குபற்றலுடன் கல்லூரி மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'கல்லூரி வசந்தம்' என்ற திரைப்படம் திரையிடப்படும்.
மறுநாள் புதன்கிழமை மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை பற்றிக்கோட்டா செமினரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் வரலாறு, யாழ்ப்பாணக் கல்லூரி ஆற்றும் பணிகள், கல்லூரியின் எதிர்காலத்துக்கான பாதைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துப் பகிர்வும் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளன.
நிகழ்வில் கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவர் பேராயர் அருட்கலாநிதி வே. பத்மதயாளன், கல்லூரியின் அதிபர் திருமதி ருஷிறா குலசிங்கம், கல்லூரியின் முன்னாள் அதிபர் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவர்.
எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பழைய மாணவர்கள் பங்கேற்கும் கலாசார நிகழ்வுகள் இடம்பெறும்.
எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-125)

# வத்திக்கானின் பிரதிநிதி வருகிறார் யாழ்ப்பாணம்!

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே யாழ்ப்பாணம் மறைமாவட்டத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அவருடைய வருகையை முன்னிட்டு சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வத்திக்கானின் இலங்கைக்கான பிரதிநிதி இந்தமாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் மறை மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார். யாகப்பர் ஆலய திருவிழாவில் அவர் கலந்துகொள்ளவுள்ளதுடன், தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறுபட்ட இடங்களுக்கும் சென்று கத்தோலிக்க அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுமக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் - என்றார். (ம)

# நாவற்குழி வீட்டுத் திட்டத்துக்கு குடிதண்ணீர் விநியோகம்

சாவகச்சேரி, ஜூலை 13
நாவற்குழி, ஐந்து வீட்டுத் திட்ட கிராமத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது எனத் தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.
இங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் தூர இடங்களுக்குச்சென்று குடிதண்ணீரை பெற்று வரவேண்டியுள்ளது என 30 குடும்பங்கள் இணைந்து பிரதேச செயலகத்தில் முறையிட்டன.
அதனையடுத்து தற்போது குடிதண்ணீர் விநியோகம் சீர்செய்யப்பட்டுள்ளது. ஒருசில் மாதாந்தக் கட்டணம் செலுத்தாதவர்களுக்கே சில இடங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டது என்றும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ச-ரி2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதப்...

முறையும், சர்வதேச நிபுணர்களும் இதில் தலையிடவேண்டும் - இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் தொடர் சுழற்சிமுறைப் போராட்டம் 3 ஆயிரம் நாள்களைக் கடந்துள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போரில் மக்களைக் கொல்லவில்லை, இனப் படுகொலை நடக்கவில்லை என்று இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டிருக்கின்றது. அவ்வாறிருக்கையில் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் மனிதப் புதைகுழி எவ்வாறு வந்தது? கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி முற்றுமுழுதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மனிதப் புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட உடல்கள் யாருடையவை? இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் நீதியாகச் செயற்படும் என்று எம்மால் நம்பிக்கை கொள்ளமுடியாது. இலங்கையின் பொறிமுறை மீது எமக்கு நம்பிக்கை துளியும் இல்லை. இந்த விடயத்தில் சர்வதேச பொறிமுறை ஒன்று கொண்டுவரப்பட்டு, சர்வதேச நிபுணர்கள் இதில் தலையிடவேண்டும். கண்டுபிடிக்கப்பட்ட உடல்கள் யாருடையவை என்பது வெளிப்படுத்தப்படவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினர் விசாரணை எனும் பெயரில் எம்மை மிரட்டுகின்றனர். சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக கண்துடைப்பு விசாரணையை முன்னெடுக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேச விசாரணை ஒன்றேவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனும் பங்குபற்றினார். (அ-எ-19)

## அர்த்தமுள்ள...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, பிரதித் தூதுவர், அரசியல் செயலர் ஆகியோர் நேற்றுக் காலை நேரில் சென்று சந்தித்தனர். இந்தச் சந்திப்பு சம்பந்தனின் இல்லத்தில் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றன.

சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையொட்டிய பேச்சுகள் எல்லாம் அவருக்குத் தெரியும். நாட்டின் தலைவராகத் தெரிவாகிய பின்னர் முதல் தடவையாக அவர் இந்தியாவுக்குச் செல்கின்றார். இதன்போது இந்தியப் பிரதமரைச் சந்திக்கவுள்ளார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் செயற்படுத்தப்படாத பகுதிகளை செயற்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் அழுத்தம் கொடுக்கவேண்டும். குறிப்பாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வலியுறுத்தவேண்டும் என சம்பந்தன் கோரிக்கை விடுத்தார். இந்த விடயத்தை உடனடியாக இந்தியப் பிரதமர் மோடிக்கு தெரியப்படுத்துவதாக தூதுவர் கோபால் பாக்லே உறுதியளித்தார். ஜனாதிபதியின் இந்தியப் பயணம் முடிவடைந்த பின்னர் என்ன நடந்தது என்பதை மீண்டும் சந்தித்து விளக்கமளிப்பதாகவும் தூதுவர் பாக்லே, சம்பந்தனிடம் தெரிவித்தார் - என்றார். (அ-ஒ.5)

## 2 சிறுமிகள்...

பதின்ம வயதுச் சிறுமிகள் இருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் 38 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

பலாலி பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொழும்பில் இருந்து வந்த தேசிய சிறுவர் பாதுகாப்பு பிரிவினர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நேற்று நடத்தினர்.

அந்தக் கருத்தரங்கில் பங்குகொண்ட இரு 13 வயதுச் சிறுமிகள் இலவசமாகக் கற்பிக்கும் ஒருவர் தங்களைத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்று அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பலாலி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் இரு சிறுமிகளிடமும் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் 38 வயதான சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-எ-125)

## ஆக்கிரமிப்பை...

மன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். நேற்று மண்டைதீவில் கடற்படை காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் புதிய புதிய திட்டங்கள் ஊடாகத் தங்கள் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொள்கின்றது.

இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் காணிகள் அனைத்தும் வளம் நிறைந்த காணிகள். பொன்னாலை மக்கள் குடிதண்ணீர் பெறும் குடிதண்ணீர் கிணற்றைக் கூடக் கடற்படையினர் கையகப்படுத்தியுள்ளனர். இப்போது புங்குடுதீவில் மக்கள் காணிகளை நிரந்தரமாகக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றனர்.

மனிதப் புதைகுழிகள் உள்ளன என்று நம்பப்படும் இடங்களில் புத்த விகாரைகள் முளைக்கின்றன. இவை பற்றிய தகவல்கள் தெரிந்தும் அரசாங்கத்தில் உள்ள தமிழ் அதிகாரிகள் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர்.

போராட்டம் நடைபெறும் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு தமிழ் தெரிந்த புலனாய்வாளர்கள் இருப்பார்கள். அவர்கள் உண்மையான விடயங்களை அதிகாரிகளுக்கும், அரசாங்கத்துக்கும் கூற வேண்டும். மக்களின் நியாயமான கோரிக்கைகளை உள்வாங்க வேண்டும். தமிழர்களின் பொருளாதாரத்தை வீழ்ச்சியுறச் செய்யும் நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் நிகழ்ச்சி நிரல் தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றது. நாம் இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காவிட்டால் அவர்கள் தங்கள் இலக்கை அடைந்துவிடுவார்கள். நாம் தொடர்ந்தும் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். எதிர்வரும் வாரம் இங்கு வரவுள்ள கனேடியத் தூதுவருக்கு இந்த இடங்களைக் காண்பிக்கவும், விடயங்களை விளக்கமளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் சர்வதேச ரீதியில் கொண்டு செல்லப்படவேண்டும் - என்றார். (அ-எ-27)

## துணைவேந்தர்...

திறமைப் புள்ளி அடிப்படையில் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ரி. வேல்நம்பி, பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் ஜனாதிபதியால் துணைவேந்தர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிப்பதற்கான சுற்றறிக்கைக்கு அமைவாகத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தவர்களின் தகுதி, தராதரங்களின் அடிப்படையில் திறமைப் புள்ளியிடலுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை நேற்றுப் புதன்கிழமை காலை கூடியது.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்துள்ள தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ. கண்ணதாசன், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான தி.வேல்நம்பி மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபா ஆகியோர் பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் தமது அளிக்கைகளை முன்வைத்தனர்.

சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட புள்ளித்திட்டத்துக்கமைய ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் தனித் தனியாகப் புள்ளிகளை வழங்கினர். புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் முறையே பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா (76 புள்ளிகள்), சிரேஷ்ட பேராசிரியர் ரி. வேல்நம்பி (74 புள்ளிகள்), பேராசிரியர் செ.கண்ணதாசன் (57 புள்ளிகள்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். பேரவையின் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்படவுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின்படி பல்கலைக்கழகப் பேரவையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மூவரில் ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமையால் மிக விரைவில் அடுத்த துணைவேந்தர் அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-66.125)

## உள்ளூராட்சிச்சபை...

உறுப்புரிமை சட்ட வரைவு அரசமைப்புக்கு முரணானது என்றும், அது அதிசிறப்புப் பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்புமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் சட்டமா அதிபர் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்தச் சட்டவரைவின் 2 ஆவது சரத்து அரசமைப்பின் 3, 4, 12(1) மற்றும் 14(1) ஆகிய பிரிவுகளுக்கு முரணானது. முன்மொழியப்பட்ட ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நெருக்கடியுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல், கலைக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரம் காலவரையறையற்ற காலத்துக்கு மீண்டும் கூட்டப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள திருத்தம் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலத்தை நீடித்துத் தேர்தலைத் தாமதப்படுத்தும் விளைவை ஏற்படுத்தும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான தங்கள் பதவிக்கால வரம்பை மீறிய உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர் ஜனநாயகரீதியில் பெறப்பட்ட ஆணையின்றி காலவரையறையின்றிப் பதவியில் தொடரலாம்.

மக்களின் உரிமை அத்துடன் வாக்களிக்கும் மற்றும் தேர்தலில் நிற்கும் அவர்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும். இந்தச் சூழலில் எஸ்சி (எஸ்டி) எண்கள் 2032/2017 இல் உயர் நீதிமன்றத்தின் 20ஆவது அரசமைப்பு சட்டத்திருத்தத்துக்கு உங்கள் கவனம் செலுத்தப்படுகின்றது என்று சட்டமா அதிபர் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை மீள இணைத்துக் கலைக்கப்பட்ட சபைகளை மீண்டும் கூட்டுவதற்கான பிரதேச சபைக் கட்டளைச் சட்டம், மாநகர சபைக் கட்டளைச் சட்டம் மற்றும் நகர சபைக் கட்டளைச் சட்டம் ஆகியவற்றுக்கான திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். (அ-எ-இ)

## மோடிக்கான...

நாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பவுள்ள கடிதம் இன்று இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்படவுள்ளது. இந்தக் கடிதத்தில் சில கட்சிகளின் தலைவர்களே கையொப்பமிட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ள நிலையில், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய கடிதங்களை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்ப தமிழ்த் தரப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும், தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் ஒன்றை அனுப்புகின்றன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனும், புளொட் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் வேந்தனும் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

அதேவேளை, தங்கள் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியாக அனுப்பவுள்ளது. மறுபுறத்தில் தங்கள் கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்கனவே அனுப்பியுள்ளது. (அ-எ-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சர்வதேச சம்பியன்ஷிப் கராத்தே

# வெண்கலம் வென்ற சானுஜா கௌரவிப்பு



இந்தியாவில் கடந்தமாதம் நடைபெற்ற பகிரங்க சர்வதேச சம்பியன்ஷிப் கராத்தே சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடத்தை வென்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி தவராசா சானுயாவை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாகாதேவ ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் இந்தியத் தூதுரகத்தின் பதில் தூதுவர் ராம் மகேஸ் பங்கேற்று மாணவிக்கு மதிப்பளித்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவர்கள், சிறுவர் இல்ல மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதேவேளை - புதுடில்லியில் நடைபெற்ற இந்த சர்வதேச கராத்தே போட்டியில் இந்தியா, சீனா, இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், ஜப்பான், ஓமான், பூட்டான், மலேசியா, குவைத், உஸ்பெகிஸ்தான் என 12 நாடுகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-113)

## 'ஐஸ்'...

என்று மக்கள் நேற்று மண்டைதீவில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்த நிலையில், அவர்களுக்கு பிஸ்கட், குளிர்பானம் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொண்டனர் கடற்படையினர்.

மண்டைதீவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணி கடற்படை முகாம் அமைப்பதற்காகக் கையகப்படுத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நில அளவை நடவடிக்கைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் காணி உரிமையாளர்களும், பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகளும் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பலவந்தமாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள தங்களின் காணிகளை எவ்வாறாவது மீட்க வேண்டும் என்ற ஆதங்கத்துடன் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட மக்களுக்கு கடற்படையினர் குளிர்பானம் மற்றும் பிஸ்கட் கொடுக்க முயன்றனர்.

கடற்படையினரின் இந்தச் செயற்பாடு அங்கிருந்த மக்களை மேலும் கொதிப்படையச் செய்துள்ளது. "எங்கள் காணிகளைப் பறித்து வைத்துக் கொண்டு பிஸ்கட் கொடுக்கிறீர்களா? எங்கள் காணிகளை எம்மிடம் தந்துவிட்டுச் செல்லுங்கள். பிஸ்கட் தந்து காணிகளைப் பறிக்க முயற்சிக்காதீர்கள்" என்று அவர்கள் கொதிப்புடன் கடற்படையினரை ஏசித் திருப்பியனுப்பினர். கடற்படையினரும் தாங்கள் கொண்டுவந்தவற்றைத் திருப்பி எடுத்துச் சென்றனர். (அ-எ-66)

## கடற்படைக்கான...

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மண்டைதீவு கிழக்கில் உள்ள ஜே/7 கிராம அலுவலர் பிரிவில் 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான காணிகளை வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காகக் கையகப்படுத்தும் முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கையகப்படுத்தல் நடவடிக்கைக்காக இந்தக் காணிகளை அளவீடு செய்யும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்படும் என்று நில அளவைத் திணைக்களம் அறிவித்திருந்திருந்தது.

இந்தக் காணி கையகப்படுத்தல் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் காணி உரிமையாளர்களும், பிரதேச மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் வெலிசுமன கடற்படை முகாம் முன்பாகக் கூடி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதியில் கடற்படையினரும், கலகமடக்கும் கடற்படைப் பிரிவும், படைப் புலனாய்வாளர்களும் அதிகளவில் பிரசன்னமாகியிருந்தபோதும், பொதுமக்கள் மண்டைதீவு கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகில் ஒன்று கூடி அங்கிருந்து நகர்ந்து கடற்படை முகாம் முன்பாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடற்படையினரும், படைப் புலனாய்வாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை ஒளிப்படம் மற்றும் காணொலிப் பதிவு செய்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர். காணி கையகப்படுத்தலுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் நேற்று காணி அளவீட்டு நடவடிக்கைக்காக அங்கு வரவில்லை. (அ-எ-20,66,27)

## வடக்கில்...

போருக்குப் பின்னர் 64 பாடசாலைகள் இன்னமும் மீள ஆரம்பிக்கப்படவில்லை என்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பல பாடசாலைகள் மூடப்படும் அபாய நிலைமையை எதிர்கொண்டுள்ளன. இலங்கை முழுவதும் தற்போது 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. கிழக்கு மாகாணத்திலும், வடமாகாணத்திலும் தலா 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்துக் காணப்படுகிறது. மூதூர் கல்வி வலயத்தில் ஆயிரத்து 300க்கும் அதிகமான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுகிறது.

ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இலவசக் கல்வியைச் சீரழித்து மாணவர்களுக்குத் தொடர்ந்தும் அரசாங்கம் அநீதி இழைத்து வருகிறது - என்றார். (அ-எ-66)

## ஹெரோய்ன்...

ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்றில் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ச தலைமையிலான பொலிஸ் குழு வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்களும் சோதனையிடப்பட்டன.

பஸ் ஒன்று சோதனையிடப்பட்டபோது, அதில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவரின் பயணப் பொதியில் இருந்து ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயின் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. அதையடுத்து யாழ்ப்பாணம், நாவற்குழியைச் சேர்ந்தவரும், வவுனியாவில் வசித்து வருமான அந்தக் குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டார். கண்டுபிடிக்கப்பட்ட ஹெரோய்ன் கலப்படமற்ற தூய ஹெரோய்ன் என்பது ஆய்வுகளில் கண்டறியப் பட்டது.

இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில், சந்தேகநபர் பிணையில் செல்ல நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு, அரச சட்டத்தரணிகளான தர்சிகாதிருக்குமாரன் மற்றும் ஆறுமுகம் தனுஸன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

வழக்கு விசாரணைகளில் சந்தேகநபர் தூய ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தமை, விற்பனைக்காக எடுத்துச் சென்றமை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதை அடுத்து, 55 வயதான சந்தேகநபருக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (அ-எ-18)


**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகரில் வீடு வாடகைக்குத் தேவை.

T.P: 077 277 7779

**மணமகன் தேவை**

01. கொக்குவில் - அல்வாய். இந்து. கௌரவகுலம் (V) 1993. ரோகிணி. Phd, Assistant Lecturer Canada மணமகளிற்கு மணமகன் தேவை. பதிவெண் - 33627
02. கைதடி. இந்து. கௌரவகுலம் (V) 1991. பூசம். MSc, Research, Assistant, Canada மணமகளிற்கு மணமகன் தேவை. பதிவெண் - 34245
03. புலோலி - கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V) 1994. திருவாதிரை. Book Keaper Unior Accountant, Canada மணமகளிற்கு மகணமகன் தேவை. பதிவெண் - 34097
04. உரும்பிராய். இந்து. கௌரவகுலம் (V) 1993. திருவோணம். Masters in Biotecnolagy, Canada மணமகளிற்கு மணமகன் தேவை. பதிவெண் - 33574
05. தெல்லிப்பழை - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V) 1993 அச்சுவினி. BSc கனடா. மணமகளிற்கு மணமகன் தேவை. பதிவெண் - 33363
06. பருத்தித்துறை - சாவகச்சேரி இந்து. கௌரவகுலம் (V) 1986. திருவாதிரை. MSc கனடா. மணமகளிற்கு மணமகன் தேவை. பதிவெண் - 32904
07. தெல்லிப்பழை - உரும்பிராய். இந்து. கௌரவகுலம் (V) 1988. மிருகசீரிடம். BSc (Hons), MBA, Canada மணமகளிற்கு மணமகன் தேவை. பதிவெண் - 31812

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 போன் - 077 539 3728

**மணமகள் தேவை**

01. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V) 1979. விசாகம். (IMA), Business Administration, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 15039
02. கோப்பாய். இந்து. கௌரவகுலம் (V) 1984. சதயம். MBBS Doctor,UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32160
03. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V) 1990. விசாகம். MBBS Doctor,UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32016
04. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V) 1983. ரோகினி. BSc (Hons) Computer Science UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31305
05. உரும்பிராய். இந்து கௌரவகுலம் (V) 1974. திருவோணம். BSc Finance Advisor, கனடா Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 23110
06. மல்லாகம் - உடுவில். இந்து கௌரவகுலம் (V) 1984. சுவாதி BSc Masters in Statistics, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 28963
07. காரைநகர். இந்து கௌரவகுலம் (V) 1986. உத்திராடம் Airspace Engineer, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27891

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 போன் - 077 539 3728




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.